

# பரதநாட்டிய அரங்கேற்றம்

# BHARATHA NATYA ARANGETRAM

சிவாஜினி SIVAJINI

SATURDAY SEPTEMBER 12, 1992

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## குருவின் ஆசிகள்

கடந்த ஐந்து வருடங்களாக என்னிடம் நாட்டியப் பயிற்சி பெற்ற செல்வி சிவாஜினி சிவலிங்கம் அவர்களுக்கு இன்று அரங்கேற்றம் நிகழ்த்துவதில் மிக மகிழ்ச்சி அடைகின்றேன். அவரிடம் இயல்பாக அமைந்துள்ள கலை ஆர்வத்துடன், பெற்றோரின் உற்சாகமும் ஒற்றிணைந்து இன்றைய அரங்கேற்ற நிலை அடைவதற்கு உதவியாயிருந்தது.

சிவாஜினியின் குரு பக்தியும் அவரிடம் சுபாவமாக உள்ள பண்பும் அவரை இத்தெய்வீகக் கலையில் உன்னத இடத்தையடைய உதவுமென்பதில் ஐயமில்லை.

சிவாஜினியின் எதிர்காலம் வளம் பெற, இறைவனை வேண்டி என் ஆசிகளை வழங்குகின்றேன்.

கி. யோகேந்திரன்

## BLESSINGS FROM THE GURU

It gives me great pleasure to present Sivajini Sivalingam, before you this evening. Sivajini has been a keen student of Bharathanatyam under me for the past five years. With the tremendous encouragement and support from her parents, Sivajini has been able to develop her inborn talent to the standard required for this debut.

It is certain her amiable qualities and devotion for the teacher, (Guru Bakthi) will no doubt make her shine in this divine field.

May God bless Sivajini. My blessings are always with her.

G. Yogendran



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## Sivajini

Sivajini, born and brought up in Toronto, is the eldest daughter of Mr. and Mrs. N. Sivalingam, both of whom have been active in the Canadian Tamil Community for over two decades.

Sivajini's interest in Bharatha Natyam was sparked by her visit to Jaffna, Sri Lanka, in 1983, where she was enthralled by the exquisite beauty of the art form. A year later, with her parents' encouragement, she began her dance training under Shrimathi Shirani Balakumaran. Sivajini continued her Bharatha Natyam training under the tutelage of her guru, Shrimathi Geetha Yogendran, at Narthanalya for five years. This arangetram is the culmination of many years of hard work and dedication. The support and guidance of her parents and guru has enabled Sivajini to achieve this goal.

Sivajini had given many performances over the past several years at various cultural programs organized by the Tamil Eelam Society of Canada, Bharathi Kala Manram, and Narthanalya. She is an active student at Victoria Park Secondary School, North York, Ontario, where she has been a student counsellor. Sivajini has also been a volunteer at Scarborough General Hospital, student teacher at Roywood Public School and a nursery school volunteer. She was a student at Gateway Tamil School and has a keen interest in music.

## சிவாஜினி

கடந்த இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக, கனடாவில் தமிழர் சமூகத்தின் வளர்ச்சியில் முக்கிய பங்கு கொண்டு பணிபுரிந்து வரும் திரு. நா. சிவலிங்கம், திருமதி. ஜனனி சிவலிங்கம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியான சிவாஜினி, ரொறன்ரோவில் பிறந்து கல்வி பயின்று வருபவர்.

1983ம் ஆண்டு இலங்கைக்கு இவர் குறுகிய விஜயமொன்றை மேற்கொண்ட போது, தமிழர் கலை, கலாசாரம் மீது ஏற்பட்ட பற்றினால் ஆடற்கலையை நேசிக்க ஆரம்பித்தார். பெற்றோரின் பூரணமான உற்சாகமும் சேர்ந்து 1984ம் ஆண்டில் ஸ்ரீமதி ஷிராணி பாலகுமாரனிடம் சிவாஜினி நடனம் பயில ஆரம்பித்தார். அதன்பின்னர் நர்த்தனாலயா ஸ்ரீமதி கீதா யோகேந்திரனை தமது குருவாகக் கொண்டு முறையாக நடனம் பயின்று இன்று அரங்கேற்றம் செய்கின்றார். கடின உழைப்பு, திடமான பயிற்சி, ஊக்கம் ஆகியவைகளே நடன அரங்கேற்றத்தினை மேம்படுத்தியுள்ளன.

கடந்த பல வருடங்களாக, பல்வேறு நிகழ்ச்சிகளில் இவரது நடனம் இடம்பெற்றுள்ளது. கனடா தமிழீழச் சங்கம், பாரதி கலா மன்றம், நர்த்தனாலயா ஆகியவற்றின் வைபவங்களில் நடனமாடியுள்ளார். நோர்த் யோக், விக்டோரியா பார்க் பாடசாலையில் சிறந்த மாணவராகவும், மாணவ ஆலோசகராகவும் சிவாஜினி இருந்துள்ளார். ஸ்காபுரோ பிரதான ஆஸ்பத்திரியிலும், ரோய்வூட் பாடசாலையின் பாலர் வகுப்பிலும் ஒரு தொண்டராகவும் பணியாற்றியுள்ளார். கேற்வே தமிழ் பாடசாலையிலும் கல்வி பயின்ற சிவாஜினி, சங்கீதத்திலும் நிரம்பிய ஈடுபாடு கொண்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Ontario

The Premier of Ontario
Le Premier ministre de l'Ontario

Legislative Building
Queen's Park
Toronto, Ontario
M7A 1A1

Hôtel du gouvernement
Queen's Park
Toronto (Ontario)
M7A 1A1


I am very happy to send my personal best wishes to you, Sivajini, on the occasion of your debut performance as a classical dancer.

It is always wonderful to see the young people of our country committing themselves to developing high standards in their chosen fields. I'm told that the Bharatha Natya Arangetram is a very difficult dance form, requiring hours of patience and hard work to master. I commend you for your dedication and devotion.

You are also helping to popularize the art forms of ancient India. It is through the arts that the cultural memory of a people is maintained. Because of your love for Indian classical dance, you are allowing us in Ontario the opportunity to enjoy and appreciate this graceful art form.

I'm sure your performance will be a great success, and I wish you every success in your future endeavours.

Bob Rae





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

## ஆசிச் செய்தி

கனடா ரொறன்ரோ ஸ்ரீ கணேசா ஆலய பரிபாலன சபைத் தலைவர் சிவதரும வள்ளல் உயர்திரு. சிவலிங்கம் தம்பதிகளின் குமாரி சௌபாக்கியவதி சிவாஜினியின் பரதநாட்டிய அரங்கேற்றம் இறைவன் இறைவி ஸ்ரீசிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீசிதம்பர நடராஜப் பெருமானின் அனுக்கிரகத்தையும், நாட்டிய ஆசிரியையின் குரு ஆசியுடனும், சுருதி லயம் ஆக அமைந்த பிதா மாதா ஆசியுடனும், பக்கவாத்திய கலைஞர்களினது சிறப்புடன் ஆடற்கலை அரசியாக கலையின் திறமையுடன் நாட்டிய அரங்கேற்றம் அமைய வேண்டுமென சிதம்பர நடம்பயில் நடராஜப் பெருமான் கழல்களை இறைஞ்சி ஆசி கூறுகிறோம்.

வாழ்க குமாரி சிவாஜினி
வளர்க நாட்டியக் கலை

இங்ஙனம்
**பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள் தம்பதிகள்**
பிரதிஷ்டா சிரோமணி. சுவானுபூதி கிரியா
கிரமஜோதி, வேதாகம கிரியாகலாநிதி
ஸ்ரீலங்கா - கொழும்பு

உ

## வாழ்த்து

ஆனை விழுங்தான் அருள்மிகுவி நாயகனும்
கோனை நினைந்து கும்பிடுமின் - மேனகை போற்
கலைத் திறனும் கைகூடும் கன்னி சிவாஜினிக்கு
நிலைத்திடுமே நீண்ட புகழ்.

மெய்ஞ்ஞான நெறியில் மேம்பட்டு விளங்கி
விஞ்ஞான அறிவிலும் விண்ணராய் விளங்கி
கீழைத்தேயப் பரப்பினிற் சிறந்த
ஈழ நாட்டினில் இணைந்து வளர்ந்திடும்
சைவ நீதியும் சமரச வாழ்வும்
அமிழ்தினும் இனிய தமிழ் மொழி வளமும்
தாளமும் கலையும் அன்பு நெறியும்
அவனியிற் பரப்பும் அரும்பணி நயந்து
கனடா நாட்டிற் கற்றோர் மத்தியில்
மனத்திடை எழுச்சியும் உணர்ச்சியும் தூண்ட
நண்பர் சிலருடன் நலமுற ஆய்ந்து
சைவக் கோயிலும் சங்கமும் தமிழ் மொழி
பயின்றிடு சாலையும் பாங்குடன் ஈழத்
தமிழர் அவாவது தரணியில் மலரச்
செயற்படு கின்ற சிவா எனப் பெயரில்
அறநெறி யாளனும் அம்மை ஜெனனியும்
பேணி வளர்க்கும் பெண்மை நலத்தினர்
அக்கா என்று ஹரிணி அழைக்க
அன்புசால் பண்பினள் அன்னமே அனையாள்
சிவாஜினிப் பெயராள் சீர் திகழ் நங்கை
நர்த்தனம் தாண்டவம் நடனமும் நடித்து
மேலை நாட்டில் மேம்படு கலைஞரும்
தமிழர் கலையின் தனிப்பெரும் சிறப்பையும்
மென்கலை உணர்த்திடும் தத்துவப் பொருளையும்
கண்டுங் கேட்டுங் கவரப் பெற்று
தாமும் பயிலும் தள்ளா விருப்புடன்
நாடச் செய்வாள் நம்மகள் என்று
தில்லைச் சிவனார் சிலம்பொலி நாளும்
சேரமான் பெருமாள் கேட்டது போல
மான சீகமாய்க் கேட்டினி திருந்தே
புண்ணிய வதியாம் பூட்டி ஆச்சி
அன்பிற் குரிய சின்னத் தாத்தா
நன்மையை நாடும் சின்னம் மம்மா
பிரிய முடைய பேபியம் மம்மா
இனியவ ரான இந்தியா மாமா
கொண்டாடி மகிழும் கொழும்பு மாமி
நியூசீ லந்தின் இளங்கோ மாமா
சுற்றமும் சூழலும் என்றுநா மெல்லாம்
கூடியும் தனித்தும் குதூக லத்துடன்
வாழிய இனிது வாழிய என்றே
வாழ்த்துதும் வாழ்த்துதும் வாழ்த்துதும் நன்றே

சுபம்

**வித்துவான் தாமோதரம்பிள்ளை ஆறுமுகம்**
பெரிய பாட்டனார் - இளவாலை, தமிழீழம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சி நிரல்

பிரதம விருந்தினர்:

திரு. ஜேம்ஸ் கரிகியானிஸ் (பாராளுமன்ற உறுப்பினர், ஸ்காபுரோ - ஏஜின்கோர்ட்)

கணேஷா துதி: கணேஷப் பெருமானின் ஆசியைப் பெறுவதற்கான பாடல்
தொடர்ந்து குரு. கீதா யோகேந்திரனின் சலங்கைப் பூசை

வரவேற்புரை

| | | |
|---|---|---|
| 1. புஸ்பாஞ்சலி | இராகம்: நாட்டை | |
| தொடர்ந்து | | |
| அலாரிப்பு | இராகம்: நாட்டை | தாளம்: ரூபகம் |
| 2. ஜதிஸ்வரம் | இராகம்: சாவேரி | தாளம்: ரூபகம் |

## இசைவேளை

| | | |
|---|---|---|
| 3. சப்தம் | இராகம்: இராகமாளிகை | தாளம்: மிஸ்ரசப்பு |
| 4. வர்ணம் | இராகம்: சங்கராபரணம் | தாளம்: ஆதி |

## இடைவேளை

| | | |
|---|---|---|
| 5. தாண்டவம்: ஓம் கார வாக்கியம் | இராகம்: கம்பீர நாட்டை | தாளம்: ஆதி |
| 6. பதம் - சுந்தரத் தமிழ் | இராகம்: ஹம்சத்வனி | தாளம்: ஆதி |

பிரதம விருந்தினர் உரை

| | | |
|---|---|---|
| 7. பதம்: குழலிசை அமுதூட்டி | இராகம்: சாருகேசி | தாளம்: ஆதி |
| 8. தில்லானா | இராகம்: அமிர்தகல்யாணி | தாளம்: ஆதி |

மங்களம்

| | |
|---|---|
| நட்டுவாங்கம் / நடன அமைப்பு | கீதா யோகேந்திரன் |
| பாட்டு: | சசிகலா மகேஸ்வரன் |
| | சரோஜா ஜெயரட்ணம் |
| மிருதங்கம்: | ஆனந்தராஜா சேனாதிராஜா |
| வயலின்: | கமலா சுந்தரலிங்கம் |
| வீணை: | சசிகலா மகேஸ்வரன் |
| புல்லாங்குழல்: | தம்பு சுரேந்திரன் |
| சுருதி: | ஹரினி சிவலிங்கம் |
| அறிவிப்பாளர்கள்: | லீலா சிவேந்திரா |
| | ப.சிறிஸ்காந்தன் |
| படங்கள்: | ஸ்ரீ கதிர்காமநாதன் |
| ஒலி - ஒளி: | ஸ்ரீ ரவீந்திரன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PROGRAM

CHIEF GUEST:

**JAMES KARYGIANNIS** (MEMBER OF PARLIAMENT, SCARBOROUGH-AGINCOURT)

**GANESHA STHUTHI** - PRAYER TO LORD GANESHA
OPENING INVOCATIORY SONG, ADDRESSED TO LORD GANESHA.

CONTINUED BY **SALANGAI POOJA BY GURU GEETHA YOGENDRAN**

**WELCOME ADDRESS:**

| | | |
|---|---|---|
| 1. **PUSHPANJALI** | RAGAM: NATTAI | |
| CONTINUED BY **ALLARIPPU** | RAGAM: NATTAI | THALAM: RUPAKAM |
| 2. **JATHEESWARAM** | RAGAM: SAVERI | THALAM: RUPAKAM |

**MUSICAL INTERLUDE**

| | | |
|---|---|---|
| 3. **SABDAM** | RAGAM: RAGAMALIKAI | THALAM: MISRACHAPU |
| 4. **VARNAM** | RAGAM: SHANGARAPARANAM | THALAM: ADI |

**INTERMISSION**

| | | |
|---|---|---|
| 5. **THANDAVAM: OM KARA VAKYAM** | RAGAM: GHAMBEERA NATTAI | THALAM: ADI |
| 6. **PADAM: SUNDARA THAMIL** | RAGAM: HAMSATHVANI | THALAM: ADI |

**ADDRESS BY THE CHIEF GUEST**

| | | |
|---|---|---|
| 7. **PADAM: KULALISAI AMUTHUUDI** | RAGAM: SARUGESI | THALAM: ADI |
| 8. **THILLANA** | RAGAM: AMIR KALYANI | THALAM: ADI |

**MANGALAM**

| | | |
|---|---|---|
| NATTUVANGAM & CHOREOGRAPHY | **SRIMATHY GEETHA YOGENDRAN** | |
| VOCAL: | **SRIMATHI SASHIKALA MAHESWARAN** | |
| | **SRIMATHY SAROJA JEYARATNAM** | |
| MIRUDANGAM: | **SRI ANANDARAJAH SENATHIRAJAH** | |
| VIOLIN: | **SRIMATHI KAMALA SUNTHARALINGAM** | |
| VEENA: | **SRIMATHI SASHIKALA MAHESWARAN** | |
| FLUTE: | **SRI THAMBU SURENTHIRAN** | |
| SRUTHI: | **MISS. HARINI SIVALINGAM** | |
| MASTER OF CEREMONIES: | **SRIMATHI LEELA SIVENDRA** | (ENGLISH) |
| | **SRI P. SRISKANTHAN** | (TAMIL) |
| PHOTOGRAPHY: | **SRI KATHIRGAMANATHAN** | |
| LIGHTING & AUDIO: | **SRI RAVINDRAN** | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## செல்வி சிவயோகமதி கந்தவனம் (பேர்த்தியார் - Grandma) அவர்களின் வாழ்த்துச் செய்தி

"நடனக்கலை அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள் நான்கினையும் நல்க வல்லது; மன உறுதி, உடல் வளம், இன்ப உணர்ச்சி முதலிய நற்பண்புகளையும் அளிக்க வல்லது. இக்கலை தரும் இன்பம் தவத்தினர் அடையும் இன்பத்திற்கு இணையானது என்பது கி.மு. மூன்றும் நூற்றுண்டில் நடனத்தைப் பற்றிக் கூற எழுந்த முதல் வட மொழி நூலாகிய பரதம் என்னும் நூலில் கூறப்படும் சிறப்புச் செய்தியாக உள்ளது. இப்புனிதமான தெய்வீகக் கலையை பிரம்மா நான்கு வேதங்களில் இருந்தும் ஐந்தாவது வேதமாகப் படைத்தார். பரதக் கலை நடராசப் பெருமானிடம் இருந்து தோன்றிய தெய்வீகக் கலையாகும். எம் முழு முதற் கடவுளாம் சிவபெருமானின் மூர்த்தங்களில் தாண்டவமாடும் நடராசப் பெருமான் வடிவமே பெருமை உடைத்து. அது பஞ்சகிருத்தியங்களை மட்டும் விளக்கவில்லை; அருள் விளக்கத்தையும் விளக்கி சிவபோக ஆனந்த நிலையையும் விளக்குகிறது.

"இனித்த முடைய எடுத்த இப்பொற் பாதமும் காணப் பெற்றால்
மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே" என்கின்றார் ஆடல் வல்லானின் ஆடற்கோலத்தைக் கண்டு களித்த அப்பர் சுவாமிகள். இத்துணை அற்புத சக்தி வாய்ந்த ஆடற்கலையை அந்நிய நாட்டுச் சூழ்நிலையிலும், நம் குலக்கொழுந்து கற்றுத் தேறக் கிடைத்தது பெரும் பேறென எவரும் கருதுவர்.

அறுபத்து நான்கு கலைகளுள் பரதம் ஒன்றாகும். ப-பாவம், ர-ராகம், த-தாளம். பாவராகதாளம் என்ற மூன்றெழுத்தும் ஒன்று கூடியதே பரதம். அது மக்களின் பாரம்பரிய உடமையாகும். எமது பண்பாட்டை விளக்கும் இந்நடனக் கலையை உலக நாடெல்லாம் பரவச் செய்வது எமது தலையாய கடனாகும். கடல் கடந்து சென்று எமது கலை கலாச்சாரங்களைப் பரப்பும் வாய்ப்பு எமது பேர்த்தி சிவாஜினிக்குக் கிடைத்ததை தில்லை நடராஜனின் திருவருள் என்றே நினைத்து மகிழ்கின்றேன். எத்தனையோ பொறுக்கி எடுத்த பெயர்களுள் சிவாஜினி என்ற பெயரே பொருந்தியது. அது அவர் சிவனின் நர்த்தனத்தை விரும்புவார் என்று முன்கூட்டிய அறிவித்தல் போல் அமைந்து விட்டது. நான் உம்மை ஒரு "டான்ஸர்"(Dancer) ஆக அன்று பிரபல 'டாக்டர்'(Doctor) ஆகக் காணவே விழைகின்றேன் எனக் கடிதம் அடிக்கடி எழுதுவேன். ஆனால் அவரின் மனமோ தெய்வீகக் கலையாம் பரதக் கலையில் லயித்து விட்டதை எம்மால் தடை செய்ய முடியவில்லை. இது இறைவனின் திருவிளையாடல் என்றே இன்று வியக்கின்றேன். இன்று இத் தெய்வீகக் கலையில் பாண்டித்தியம் பெற்று அரங்கேற்றத்துக்கு ஆளாகிவிட்ட சிவாஜினியின் கலையார்வத்தை மனமாரப் பாராட்டி வாயார வாழ்த்துகின்றேன். செல்வியின் கைவழி நயனம் செல்லும் நடனக் கோலத்தையும் சதங்கையொலியையும் இங்கிருந்து கொண்டே மானசீகமாகக் கண்டும் கேட்டும் ரசித்து, பரவசமடைகின்றேன். செல்வி சிவாஜினியின் அன்னை நடனக் கலையில் அடி எடுத்து வைத்தாரே ஒழிய பாண்டித்தியம் பெறவில்லை. ஆனால் இன்றோ மகள் தாயின் ஆசையைப் பூர்த்தி செய்த பெருமையைத் தேடிக் கொண்டார். எம் மனமும் பூரிக்கச் செய்து விட்டார். கனடா நாட்டிலும் கன்னித் தமிழ் மணம் கமழச் செய்யும் ஆர்வம் மேன்மேலும் பெருகட்டும். தமிழ்த் தாயின் செல்வப் புதல்வியாய்ப் புகழ் பெருக்கிப் பல்லாண்டு வாழட்டும்.

எனது பேர்த்தி (Grand daughter) சிவாஜினி, நடனக் கலையில் சிறந்து, புகழ் மேலும் மேலும் ஓங்கவும் அரங்கேற்றம் இனிது நடைபெறவும் எல்லாம் வல்ல தில்லைக் கூத்தன் அருள் வேண்டி ஆசீர்வதித்து வாழ்த்துகின்றேன். உலகம் போற்றும் நடனக் கலையைப் பயிற்றிய கண்மணி சிவாஜினியின் திறன்மிகு ஆசிரியை, அரங்கேற்ற விழா எடுக்கும் அருமைப் பெற்றோர் அனைவரையும் இப்பொன்னாளில் வாழ்த்தக் கடமைப்பட்டுள்ளேன்.

பேர்த்தி நீ நீடு வாழி! என்றும் பேரோடு புகழும் ஓங்க!

செல்வி சிவயோகமதி கந்தவனம் B.A.
இளைப்பாறிய ஆசிரியை, தமிழீழம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

VICTORIA PARK SECONDARY SCHOOL

15 WALLINGFORD ROAD, NORTH YORK, ONTARIO M3A 2V1 395-3310

September 8, 1992

Sivajini Sivalingham
134 Old Sheppard Avenue
Willowdale, Ontario

Dear Sivajini:

I am very happy to have the opportunity to have Sivanjini, a delightful young woman, as a student at Victoria Park Secondary School. I am taking this opportunity to thank her for the invitation to attend her Arangetram.

I am a strong believer in maintaining cultural traditions, especially artistic traditions that give young people a sense of belonging and a cultural identity.

I know that many hours of dedication have led to this graduation ceremony and I am looking forward to a very entertaining evening.

Maurice Bergevin
Vice-Principal

NORTH YORK
SCHOOLS



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## எனது குரு

இன்றைய நாள் எனது வாழ்க்கையில் மிகவும் மகிழ்ச்சிக்குரிய ஒரு பொன்னுன நாள். எனது பெற்ருேரின் பெருமகிழ்வுக்குரிய விருப்பமும், எனது குருவின் அன்பு கலந்த கற்பித்தலும் ஒன்று சேர்ந்து இன்று அரங்கேறுவதையிட்டு நான் அளவில்லா ஆனந்தமடைகிறேன்.

பாரதத்தின் புராதன கலைகளில், தெய்வீகம் பொங்கிப் பிரவாகிக்கும் பரதக்கலையில் சிறந்து விளங்கும் திருமதி. கீதா யோகேந்திரன் அவர்களை எனது குருவாகக் கிடைக்கப்பெற்றமை நான் செய்த அதிர்ஷ்டமாகும். "மாதா, பிதா, குரு, தெய்வம்" என்பது எனது வாழ்க்கையில் அர்த்தமுள்ளதாக அமைந்துள்ளது.

கடந்த ஐந்து வருடங்களாக ஆடற்கலையை அர்த்த சுத்தியுடன் எனக்குக் கற்றுத் தந்து, இன்று எனக்கு அரங்கேற்றம் நிகழ்த்தும் எனது குரு அவர்கள் கலாஷேத்திர முறையில் நடனக் கலையை முழுமையாகக் கற்றவர். எட்டு வயதில் ஆடற் கலையைப் பயில ஆரம்பித்த இவரின் அரங்கேற்றம் 1973ம் ஆண்டில் நடைபெற்றது.

1985ம் ஆண்டில் ரொறன்ரோவில் 'நர்த்தனுலயா' நடனக் கல்லூரியை ஆரம்பித்து, இத்துறையில் ஆர்வமுள்ள என் போன்ருேருக்கு நடனம் கற்றுத் தரும் எனது குரு, நல்லதொரு நண்பராகவும், அதே சமயம் நல்லாசிரியராகவும் திகழுகின்ருர்.

எனது குருவின் கலைப்பணி மேலும் மேலும் வளர்ந்து, இங்நாட்டில் வதியும் தமிழ்க் குழந்தைகள் பலருக்கும் அவரது சேவை கிடைத்திட றிச்மன்ட் ஹில்லில் அமர்ந்திருக்கும் அனைத்துத் தெய்வங்களினதும் தாழ் பணிந்து இறைஞ்சுகின்றேன்.

சிவாஜினி சிவலிங்கம்

## My Guru

Today is a very happy and important day in my life-my *Bharatha Natya Arangetram* day, and I am blessed with this opportunity only as a result of total dedication from my parents and my teacher.

My guru Shrimathi Geetha Yogendran is a very distinguished and talented Bharatha Natyam dancer and teacher, and it is my good fortune that I was able to receive my training from her. She had her *arangetram* nearly two decades ago in Sri Lanka. Shrimathi Geetha later studied and graduated in Kuchipudi dance in 1973.

Shrimathi Geetha Yogendran founded *Narthanalaya* (Canadian Centre for South Asian Dances) in Toronto in 1985 and a large number of students from the Greater Toronto area are receiving dance training under her expert guidance. *Narthanalya*, to its credit, has completed several successful *arangetrams*.

I offer my prayers to the Lord at Richmond Hill Hindu Temple for my Guru's continued service to the community at large.

Sivajini Sivalingam



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Bharatha Natyam

**Bharatha Natyam**, a highly developed form of classical dance of South India, is believed to be endowed with divine origin. It is essentially, a devotional art and an intricate part of temple worship. It is an exhibition of virtuosity and a complete dedication to the Lord, and is the symbol of the divine harmony of life. It stems from the appreciation that poetry is a dance of words, drama a dance of events, and painting a dance of thoughts, dancing is the perfect harmony of body and spirit. Dancing is beautified as the perfect harmony of life and its perfection, the aesthetic delight. The three letter **Bha Ra Tha** which make up the word Bharatha signify **Bhava**-Emotion, **Raga**-Melody, **Thalam**-Rhythm.

Bharatha Natyam is the most difficult, the most intricate and most graceful form of dancing of its kind. It is one of the greatest arts that has been handed down from generation to generation by artists in South India. In has to be practised with great earnestness and presented with a great sense of devotion and dedication. The rigorous precision of foot and hand movements, the eloquent range of facial expression, depicted through the eyes and mouth, and the total linear consonance of body in exacting and exciting in its perfection.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நன்றிகள்

- நடன ஆசிரியை, குரு, ஸ்ரீமதி கீதா யோகேந்திரன் அவர்களுக்கும்
- சகல கலைஞர்களுக்கும்
- பிரதம விருந்தினர் ஜேம்ஸ் கரிகியானிஸ் (பா.உ) அவர்களுக்கும்
- ஸ்காபுரோ கல்விச் சபையினருக்கும்
- உறவினர்கள், நண்பர்கள், அன்பர்கள், பல வழிகளிலும் உதவிய அனைவருக்கும்
- ராசு ஒலி, ஒளி அமைப்பாளர்களுக்கும்
- வீடியோ அன்ட் மேக் அப் அமைப்பாளர்கள் ஏசியன் ரெலிவிஷன் நெற்வேக் நிறுவனத்தாருக்கும்
- படப்பிடிப்பாளர்கள் கதிர், பரன் ஆகியோருக்கும்
- 'PORTELLO' தயாரிப்பாளர்களுக்கும்
- றிப்ளக்ஸ் அச்சகத்தாருக்கும்
- அரங்கேற்றத்தில் சமுகமளித்துச் சிறப்பித்த அனைவருக்கும்

எங்களின் உளம் கனிந்த நன்றிகள்

நா.சிவலிங்கம், ஜனனி சிவலிங்கம்,
சிவாஜினி, ஹரிணி

## THANK YOU

**Mr. & Mrs. Sivalingam , Sivajini and Harini wish to thank**

- The Guru Srimathi Geetha Yogendran
- All the Artists
- James Karygiannis M.P., our Chief Guest
- Scarborough Board of Education
- Relatives, friends & well wishers who have helped in various ways.
- Rasu Sound & Lighting Productions
- Asian Television Network for Video & Make up
- Kathir & Paran for Photography
- Manufactures of 'PORTELLO'
- Reflex Printers
- And last but not least every one of you assembled tonight for gracing this occasion with your presence

EDITED BY: **THIRU S. THIRUCHELVAM** • LAYOUT & PRINTING: **REFLEX PRINTING**, 1108 BAY ST., TORONTO • **975-0196**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org